www.tnschools.co.in

Register Number | | | | | |

# பகுதி I — தமிழ் — முதல் தாள்

( செய்யுளும், இலக்கணமும் )

# Language — Part I — TAMIL — Paper I

( New Syllabus )

www.tnschools.co.in

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

*குறிப்பு* : i) விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினவாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

ii) வினா எண் VI க்கான விடை மட்டும் செய்யுள் வடிவில் அமைதல் வேண்டும்.

I. பின்வரும் வினாக்களுள் எவையேனும் ***நான்கனுக்கு*** (ஒவ்வொன்றுக்கும் *ஐந்து வரிகளில்)* விடை எழுதுக : $4 \times 2 = 8$

1. கபிலரைப் புலவர் பெருமக்கள் எங்ஙனம் பாராட்டியுள்ளனர் ?
2. ஒறுத்தாரும் பொறுத்தாரும் எய்துவன யாவை ?
3. சிலப்பதிகாரம் கூறும் மூன்று உண்மைகள் யாவை ?
4. கலம்பகம் - பெயர்க்காரணம் தருக.
5. குழந்தைத் தொழிலாளர்கள் ஏன் பம்பரம் சுற்றி விளையாட முடியவில்லை ?
6. சின்னச் சீறா - விளக்குக.

[ Turn over

II. பின்வரும் வினாக்களுள் எவையேனும் ***மூன்றனுக்கு***, (ஒவ்வொன்றுக்கும் *பத்து வரிகளில்*) விடை எழுதுக : 3 × 4 = 12

7. இந்தியர் அனைவரும் எவ்வெண்ணத்தைக் கைக்கொள்ளல் வேண்டும் என நாமக்கல் கவிஞர் குறிப்பிடுகிறார் ?

8. நரிவெரூஉத் தலையார் பயனில்லாத முதுமையுடையாரை விளித்துக் கூறுவனவற்றை எழுதுக.

9. அறிவுடையாரது இலக்கணங்களாகத் திருவள்ளுவர் கூறுவனவற்றை எழுதுக.

10. கண்ணகியைக் கண்ட ஊரவர் திகைத்துக் கூறியன யாவை ?

11. கோலியாத்து தாவீதனைக் கண்டு வெகுண்டு உரைத்தவை யாவை ?

III. பின்வரும் வினாக்களுக்குள் எவையேனும் ***மூன்றனுக்கு***, (ஒவ்வொன்றுக்கும் *பத்து வரிகளில்*) விடை எழுதுக:

3 × 4 = 12

12. தலைவி, மேகத்திடம் மொழிந்த தூது மொழிகளாகக் குமரகுருபரர் கூறுவன யாவை ?

13. பெருமாள் உறை திருவேங்கடப்பதி குறித்துப் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் கூறுவன யாவை ?

14. சிக்கனத்தால் வரும் பயன்கள் பற்றி கவிஞர் சுரதா கூறுவன யாவை ?

15. சிலுவையில் பரித்தியாகம் செய்த பெருமானைக் கிருஷ்ணப் பிள்ளை எவ்வாறு அஞ்சலி செய்கிறார் ?

16. குலசேகர ஆழ்வார் வேண்டுவதும் வேண்டாததும் யாவை ?

IV. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ***ஒன்றனுக்கு*** *(இருபது வரிகளில்)* விடை எழுதுக.

1 × 8 = 8

17. பொறையுடைமை அதிகாரத்தில் திருவள்ளுவர் வெளிப்படுத்தும் கருத்துகளைத் தொகுத்தெழுதுக.

18. சீதையை அனுமன் கண்டுவந்து கூறிய செய்திகளைத் தொகுத்து எழுதுக.

19. பாரதியார் காட்டும் அந்தி வான வருணனையைத் தொகுத்து எழுதுக.

www.tnschools.co.in



V பின்வரும் செய்யுளின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக. 4 × 1 = 4

20. ''நெடுந்தேர் ஊர்மதி வலவ

முடிந்தன்று அம்மநாம் முன்னிய வினையே''

அ) இஃது யார், யாரிடம் கூறிய கூற்று ?

ஆ) 'வலவ' என்று குறிக்கப்படுபவன் யார் ?

இ) இச்செய்யுளைப் பாடிய புலவர் யார் ?

ஈ) 'முடிந்தன்று' என்று பாடலில் கூறப்பட்டுள்ளது எது ?

*அல்லது*

21. ''மாதர் தகைய மடவார்கண் முன்னரே

காதற் கணவனைக் காண்பனே ஈதொன்று''

அ) இச்செய்யுட் பகுதி இடம்பெற்ற நூல் எது ?

ஆ) இவ்வரிகள் யார் கூற்று ?

இ) 'காதற்கணவன்' என்று குறிக்கப்பட்டவன் யார் ?

ஈ) 'ஈதொன்று' என்பதன் பொருள் யாது ?

VI. 22. ''ஒன்றே யென்னின்'' என்று தொடங்கும் இறைவாழ்த்துச் செய்யுளை அடிபிறழாமல் எழுதி அதன் பாவகையையும் எழுதுக. 4 + 2 = 6

23. 'நன்றி' என்று தொடங்கும் குறட்பாவையும் 'வினை' என்று முடியும் குறட்பாவையும் அடிபிறழாமல் எழுதுக. 2 + 2 = 4

VII. 24. எவையேனும் இரண்டு சொற்களுக்கு உறுப்பிலக்கணம் தருக. 2 × 2 = 4

அ) வாழ்த்துவம் ஆ) துறவற்க இ) கொன்றார்

ஈ) அறைந்தாய் உ) புக்கேன் ஊ) நோக்கிய.

[ Turn over

www.tnschools.co.in



25. கீழ்க் கோடிட்டவற்றுள் எவையேனும் ***மூன்றனுக்கு*** இலக்கணக் குறிப்பு எழுதுக. $3 \times 2 = 6$

அ) தீது ஓரீஇ        ஆ) பொன்னடி வணங்கி

இ) சூழவே படர் முகில்        ஈ) தீராத வறுமைக்கு

உ) தமிழன்னை வாழிய வாழிய        ஊ) மல்லன் மாஞாலம்.

26. எவையேனும் ***இரண்டு*** தொடர்களுக்குப் புணர்ச்சி விதி தருக. $2 \times 2 = 4$

அ) பெருங்களிறு        ஆ) குருகுமுண்டு        இ) சிலம்பொன்று

ஈ) மரப்பட்டை        உ) கரையேற        ஊ) முன்னரண்.

27. சான்று தந்து விளக்குக. $1 \times 4 = 4$

முல்லைத் திணை அல்லது பொருண்மொழிக் காஞ்சித்துறை

28. ''உதவி வரைத்தன் றுதவி உதவி

செயப்பட்டார் சால்பின் வரைத்து''

- இச்செய்யுளில் அமைந்த அணியை விளக்குக.

*அல்லது*

உவமையணி *அல்லது* திரிபணியை விளக்குக. $1 \times 4 = 4$

VIII. பொருத்துக. $4 \times 1 = 4$

29. குறிஞ்சி — ஏற்பாடு

30. முல்லை — நண்பகல்

31. மருதம் — யாமம்

32. நெய்தல் — மாலை

— வைகறை.

www.tnschools.co.in



IX. சரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 16 × 1 = 16

33. வரத நஞ்சையப் பிள்ளை இயற்றிய குறவஞ்சி

அ) குற்றாலக்குறவஞ்சி

ஆ) தமிழரசி குறவஞ்சி

இ) சரபேந்திர பூபால குறவஞ்சி.

34. உப்புச் சத்தியாகிரகத்தில் பங்கேற்றுச் சிறைத் தண்டனையைப் பெற்றவர்

அ) நாமக்கல் கவிஞர் இராமலிங்கனார்

ஆ) பாரதியார்

இ) பாரதிதாசனார்.

35. அகநானூற்றுப் பாடல்களின் அடிவரையறை

அ) 4 அடி முதல் 8 அடி வரை

ஆ) 9 அடி முதல் 12 அடி வரை

இ) 13 அடி முதல் 31 அடி வரை.

36. பொருட்பாலில் உள்ள அதிகாரங்களின் எண்ணிக்கை :

அ) இருபத்தைந்து

ஆ) முப்பத்தெட்டு

இ) எழுபது.

37. கிறித்துவ சமயத்தாரின் கலைக்களஞ்சியம் எனப்படும் நூல்

அ) இரட்சணிய யாத்திரிகம்

ஆ) வேதியர் ஒழுக்கம்

இ) தேம்பாவணி.

38. 'நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்' என்று முன்வந்து காப்பியம் படைத்தவர்

அ) இளங்கோவடிகள்

ஆ) சாத்தனார்

இ) கம்பர்.

39. 'ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியின் கவிதா மண்டலத்தைச் சார்ந்த சுப்புரத்தினம்' என்று பாரதியால் அறிமுகப்படுத்தப்பட்டவர்

அ) பாரதிதாசன்

ஆ) சுரதா

இ) வாணிதாசன்.

40. சிற்றிலக்கியங்கள் 96 என்று கூறி பட்டியலிடும் நூல்

அ) சதுரகராதி

ஆ) வச்சணந்தி மாலை

இ) தண்டியலங்காரம்

41. உலாவிற்குரிய பாவகை

அ) சிந்துப்பா

ஆ) கலிவெண்பா

இ) வஞ்சிப்பா.

42. பாவேந்தர் பாரதிதாசனிடம் தொடக்கக் கல்வி பயின்றவர்

அ) சுரதா

ஆ) முடியரசன்

இ) வாணிதாசன்.

www.tnschools.co.in



3. சிலப்பதிகார உரையாசிரியர்களுள் ஒருவர்

அ) இளம்பூரணர்

ஆ) அரும்பத வுரைக்காரர்

இ) நச்சினார்க்கினியர்.

44. தமிழக அரசின் பாவேந்தர் நினைவுப் பரிசைப் பெற்ற முதற் பாவலர்

அ) சுரதா

ஆ) வாணிதாசன்

இ) தாரா பாரதி.

45. கம்ப நாடகத்தின் யாப்பு வண்ணங்களுக்குக் கூறப்படும் கணக்கீடு

அ) தொண்ணூற்றாறு

ஆ) நூற்றெட்டு

இ) நூறு.

46. சிறிய திருவடி என்று அழைக்கப்படுபவர்

அ) கருடன்

ஆ) அனுமன்

இ) வீடணன்.

[ Turn over

www.tnschools.co.in



47. திவ்யப் பிரபந்தத்திற்கு உரை எழுதியவர்

அ) அடியார்க்கு நல்லார்

ஆ) அரும்பத வுரைக்காரர்

இ) பெரிய வாச்சான் பிள்ளை.

48. உள்ளுறை உவமத்தில் உவமிக்கப்படும் கருப்பொருள் இதுவாக அமையக் கூடாது.

அ) உயர்ந்தோர்

ஆ) தெய்வம்

இ) தாழ்ந்தோர்.

X. கோடிட்ட இடங்களை ஏற்ற சொற்களால் நிரப்புக : 2 + 2 = 4

49. எண்ணிய எண்ணியாங் கெய்துப .................

திண்ணியர் ................. பெறின்.

50. எப்பொருள் ................. கேட்பினும் அப்பொருள்

மெய்ப்பொருள் காண்ப ................. .